பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை 26.10.2023 கதிர் 354

# இந்திய மீனவர் இனி நாளாந்தம் கைதாவர்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி உட்பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் இனிமேல் நாளாந்தம் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதனால் அரச கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளை இரவிலும் பணியாற்றுமாறு கொழும்பு தலைமையகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி நுழையும் இந்திய மீனவர்களை தினமும் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடற்படையினர் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் நள்ளிரவில் துறைமுகத்திற்கு அழைத்து வரப்படும்போது அவர்களை உடன் பொறுப்பேற்கும் வகையில் மாவட்ட கடற்றொழில் நீரியல வளத்திணைக்கள அதிகாரிகள் பணியில் இருக்க ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியைத் துறந்த நாட்டைவிட்டு ஓடவைத்த, ராஜபக் ஷக்களை ஆட்சி அதிகாரத்திலிருந்து விரட்டியடித்த அரகலய போராட்டத்தின் பின்னர் சில இளம் அரசியல் செயற்பாட்டாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். இவர்கள் எந்தக் கட்சிப் பின்புலமும் இல்லாது மக்களுக்கான அரசியலில் ஈடுபடுபவர்கள் என்பதான ஒரு தோற்றப்பாடு உருவானது. ஆனால் பின்னாளில் இவர்களில் பலர் அரசியல் கட்சிகளில் இணைந்துகொண்டு தேர்தல்களில் போட்டியிட்டு பாரம்பரிய அரசியலுக்குள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர்.

அப்படி அரகலய மூலம் அரசியல் செயற்பாட்டாளராக அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் இளம் தமிழ் சட்டத்தரணியான சுவஸ்திகா அருலிங்கம். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஒரு நிகழ்வுக்காக அவர் வருகை தருகின்றார். அவரை வரவேற்றுக் கொண்டாடியிருக்க வேண்டிய பல்கலைக்கழக மாணவர்கள் இப்போது அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கத் தயாராகி இருக்கிறார்கள்.

பல்கலைக் கழக சட்டத்துறையின் அழைப்பின் பேரில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் நிகழ்விற்காக வருகைதரும் சட்டத்தரணி சுவஸ்திகாவுக்கு வாசலிலேயே ☞ 2

## இஸ்ரேலில் இருந்து இலங்கையர்களை அழைத்து வரத் தயார்

இஸ்ரேலில் பணி புரியும் இலங்கையர்கள் அங்கு இருப்பது ஆபத்தென்றால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களை நாட்டுக்கு அழைத்துவர தயாராக இருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேல் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதலில் இஸ்ரேலில் உயிரிழந்த அனுலா வீரசிங்கவின் பூதவுடல் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு ☞ 2

### வவுனியாவில் திருடப்பட்ட
## ரூ. 30 லட்சம் பெறுமதியான பாபா சிலை 5 சந்தியில் மீட்பு


(ந.லோகதயாளன்.)

வவுனியாவில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட சாயி பாபா சிலை ஒன்று யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. சிலையின் பெறுமதி 30 லட்சம் ரூபாய் என்று ☞ 8

## ஜனாதிபதியுடனான பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு என்கிறது பெரமுன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரச்சினைகள் இருந்தாலும் அது தொடர்பில் பேசித் தீர்வு காண்போம் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரிய வசம் மற்றும், நாமல் ராஜபக் ஷ ஆகியோர் அமைச்சரவை மாற்றம் சம்பந்தமாக விமர்சனங்களை முன்வைத்துள்ள நிலையில் பொது ஜன பெரமுன வரவு, செலவுத் திட்டத்தினைத் தோற்கடிக்கும் என்ற கருத்துகள் மேலெழுந்துள்ளன. இந்த நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக, பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

"எமக்குப் பிரச்சினைகள் காணப்படுகின்றபோது நாம் ஜனாதிபதியுடன் அது ☞ 8

## ஆய்வைத் தொடங்கியது ஷி யான் -6 சீனக் கப்பல்

சீனாவின் ஷி யான் -6 ஆய்வுக் கப்பலானது தனது கடல் ஆய்வைத் தொடங்கியுள்ளது.

இலங்கை அரசின் உத்தியோகபூர்வ அனுமதிக்கு அமைவாக 48 மணித்தியாலங்கள் அக்கப்பல் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

யால கடற்பகுதிக்குச் சென்றுள்ள குறித்த கப்பலானது. கடல் நீரின் நிலை, கடல் நீரின் வெப்பநிலை, ☞ 8

## பயனாளிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அஸ்வெசும வாரம்

அஸ்வெசும நிவாரணப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நன்மைகள் தாமதமான குடும்பங்களுக்கும், உடனடியாக நன்மைகளை வழங்க முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். பயனாளிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க அஸ்வெசும வாரமொன்றை நடைமுறைப்ப ☞ 2

## சீரற்ற வானிலையால் இரு விமானங்கள் திருப்பப்பட்டன

சீரற்ற வானிலை காரணமாக, இலங்கை வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான 2 விமானங்கள் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையம் நோக்கி திருப்பி ☞ 8

### ரூ. 20,000 சம்பள அதிகரிப்பு கேட்டு
## செத்திரிபாயவில் நேற்று பெரும் போராட்டம்
### ஆயிரக்கணக்கில் திரண்டனர் அரச ஊழியர்கள்

நவம்பர் 13 சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு, செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரி அரச ஊழியர்கள் நாடு முழுவதும் நேற்று க்கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பிரதான ஆர்ப்பாட்டம் செத்திரிபாயவில் இடம் பெற்றது.

அரச மற்றும் மாகாண சேவைகள் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் ☞ 2

## அடிப்படை பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் ஆட்சி எமக்கு வேண்டாம்
### பேராசிரியர் பீரிஸ் காட்டம்

மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் ஆட்சி எமக்குத் தேவையில்லை என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வாழ்க்கைக்கான அன்றாடப் பாவனைக்குத் தேவையான பொருட்களின் விலைகளை இலங்கை அரசு அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு, மின்சாரம், நீர் உள்ளிட்டவற்றுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மக்களின் வாழ்க்கைக்கு அடிப்ப ☞ 8

### ஒரு லட்சம் வேலை வாய்ப்பின் கீழ்
## வடக்கில் அரச நியமனங்களைப் பெற்ற சிங்களவர்கள் திருப்பி அனுப்பப்படுவர்
### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுப் பின்னர் வடக்கு மாகாணத்தில் உள்ள அரச அலுவலகங்களுக்கு நியமனம் செய்யப்பட்ட சிங்களவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொல் லியல் ☞ 8

## தொடருந்து சேவைகள் 12 நேற்று திடீர் ரத்து

தொடருந்துக் கட்டுப்பாட்டாளர்கள் பணிக்கு வராத காரணத்தினால் நேற்று பல அலுவலக ரயில் சேவைகள் இடை நிறுத்தப்பட்டன என்று தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

12 அலுவலக ☞ 8

## ரணில் ஓர் இடைக்கால ஜனாதிபதிதான் 2024 பெரமுன வேட்பாளரை இறக்கும்
### கட்சியின் பொதுச் செயலர் சாகர உறுதி

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகவே தெரிவு செய்தோம். 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் எமது உறுப்பினரையே வேட்பாளராக களமிறக்குவோமென பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரிய வசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்துக்கு பின்னரான ☞ 2

## காலநிலைக்கு உகந்த விவசாய பாடசாலை உலக வங்கி பிரதிநிதிகள் நேரில் ஆராய்வு

உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே மற்றும் தெற்காசியாவிற்கான உலக வங்கியின் பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரைசர் உள்ளிட்ட குழுவினர் திறப்பனையில் உள்ள காலநிலைக்கு உகந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலைக்கு நேற்று களப்பயணமொன்றை மேற்கொண்டனர்.

காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆராய்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமெரிக்காவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தின்போது, உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுடன் விசேட சந்திப்பொன்றை நடத்தினார். இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற, ☞ 2

## இனி இது .....

கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான முன்னேற்பாட்டோடு மாணவர்கள் தயாராக இருக்கின்றனர்.

மாணவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, அதனை உதாசீனப்படுத்தி, அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் போன்று நடந்துகொண்டு அவர் பல்கலைக் கழகத்திற்குள் நுழைவாரானால், உடனடியாகவே சட்டத்துறை மாணவர்கள் அனைவரையும் வகுப்புக்களைப் புறக்கணிக்குமாறு கோருவதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தயார் நிலையில் முழு ஏற்பாடுகளோடு காத்திருக்கின்றது.

இளம் பெண் சட்டத்தரணிக்கு மாணவர்கள் இவ்வாறு மூர்க்கமான எதிர்ப்பைக் காட்டுவதற்குத் தயாராவதற்குக் காரணம், அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றித் தெரிவித்த கருத்துக்கள்தான்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு கொடூரமான பாசிச அமைப்பாகும் என சுவஸ்திகா தெரிவித்திருந்தார்.

ஈழப்போராட்டம் தொடர்பாக சிங்களத்தில் எழுதப்பட்ட இரண்டு புத்தகங்கள் பற்றி விவாதிக்க, ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவரான சிறிதுங்க ஜயசூரியவினால் கொழும்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் புலிகளைச் சாடியிருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று கூறப்பட்டு மாகாண சபைகள் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவளிக்கும் நவ சமசமாஜக் கட்சியின் தீர்மானத்தைஎதிர்த்துகட்சியிலிருந்து பிரிந்து சென்று ஐக்கிய சோசலிசக் கட்சியை உருவாக்கியவர் சிறிதுங்க ஜயசூரிய. அவராலேயே இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சிங்களவர்களைப்பெரும்பான்மையாகக் கொண்டிருந்த அந்தச் சபையில்தமிழீழவிடுதலைப்புலிகள் பற்றிய தனது கருத்தை சுவஸ்திகா ஆங்கிலத்தில் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச அமைப்பு என்றே நான் நினைக்கின்றேன். இது எனது மிகவும் தனிப்பட்ட கருத்து. ஏனெனில் தமிழ் பேசும் பலர் எனது கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என நினைக்கின்றேன்.

தமிழ்சமூகத்தினுள்உருவாகியுள்ள புற்றுநோய் விடுதலைப் புலிகள் எனவும் கருதுகின்றேன். போர் முடிகின்றபோது அரசியல் ரீதியாக அதைஎவ்வாறுகையாள்வதுஎன்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

முள்ளிவாய்க்கால்படுகொலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்தமை இவர்களின் பிடிவாத அரசியலின் விளைவே.

பல எதிரிகளைக் கொன்று, தமக்கு உடன்படாத பல தமிழர்களையும் கொன்று, சிறுவர்களை போருக்கு சேர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வாய்ப்பளிக்காத கொடூர பாசிச அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம்.

போரின் இறுதிக் கட்டத்தில் உயிரிழந்தவர்களில் பலர் நீடிக்க முடியாத போருக்காக விடுதலைப் புலிகளால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள்.

இதுவே, விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்த எனது தனிப்பிட்ட கருத்தாகும் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்தே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்புவதற்கான காரணமாக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் துயரமோ, அவர்கள் மீது ஏவிவிடப்பட்ட அரசஅடக்குமுறைகள், கொடூரங்கள், அரச பயங்கரவாதம் குறித்தோ போதிய அறிவற்ற வகையில், அதற்கெதிரான போராட்ட அமைப்பின் செயற்பாடுகளை மேலோட்டமாக அணுகி அவர் விமர்சித்திருக்கிறார் என்பது மாணவர்களின் கருத்து.

அதனாலேயே தமது உணர்வுகளை அவருக்குத் தெரியப்படுத்தும் முகமாகவும் தமிழ் மக்களின் துன்ப துயரங்களையும் போராட்ட வரலாற்றையும் அவர் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்என்பதை அவருக்கு உணர்த்துவதற்காகவும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தைக் காத்திரமாக முன்னெடுப்பதற்கு மாணவர்கள்பலர்திட்டமிட்டுள்ளனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்எனக் கோரப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலின் பிரகாரம் இந்திய விசைப்படகுகள் அடுத்து வரும் நாள்களிலும் அதிகம் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இஸ்ரேலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அனுலா வீரசிங்கவுக்கு உரித்தான அனைத்து நட்டஈட்டுக் கொடுப்பனவுகளையும் அவ்வாறே செலுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இஸ்ரேலில் பணி புரிந்துவரும் எமது தொழிலாளர்களுக்கு அங்கு இருப்பது ஆபத்து என்றால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களைநாட்டுக்குஅழைத்துவர நாங்கள் தயாராக இருக்கிறோம். என்றாலும் அவ்வாறு நாட்டுக்கு அழைத்துக்கொள்ளுமாறுஇதுவரை யாரும்கோரிக்கைவிடுக்கவில்லை.

அத்துடன் போர் இடம்பெறும் பிரதேசங்களில் இருப்பவர்கள் பாதுகாப்பான இடங்களில் இருப்பதாக எமக்கு தகவல் கிடைக்கிறது. என்றாலும்இஸ்ரேலில் மாத்திரம்அல்ல, அதற்கு அண்மித்த நாடுகளில்பணிபுரிந்துவரும் இலங்கையர்களுக்கும் யுத்தத்தினால் ஆபத்து நிலைமை இருப்பதாக இருந்தால், அவர்களை நாட்டுக்கு அழைத்துவர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்திருக்கிறோம்.

அத்துடன் எமது நாடு இஸ்ரேலுக்கோ பலஸ்தீனத்துக்காஹி மாத்திரம் ஆதரவான நாடு அல்ல. நடுநிலையான கொள்கையின் அடிப்படையிலேயே எமது நாடு செயற்பட்டு வருகிறது. நாங்கள் யுத்தத்துக்கு ஆதரவில்லை.

இஸ்ரேலில் விசா இல்லாமல் இருக்கும் இலங்கையர்களுக்கு விசா வழங்குவதை நான் அனுமதிக்கமாட்டேன். இவ்வாறு விசா வழங்குவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருப்பதை நான் கண்டேன்.

இலங்கையில் வாழமுடியாது என தெரிவித்து இங்கிருந்து சென்று சட்டவிராதேமான முறையில் அந்த நாட்டில் இருந்தவர்களுக்கு விசா வழங்குவது சட்டவிராதேமாகும்.

சட்டவிராதேமான முறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் வழக்கு தாஜடுத்திருக்கும் நிலையில் அந்நாட்டு தூதுவர் தலையிட்டு விசா பெற்றுக்கொடுப்பதைநான்அனுமதிப்பதில்லை என்றார்.

## செத்சிறிபாயவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்றிருந்தனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக, அரச சேவையில் ஈடுபட்டுள்ளஊழியர்கள்அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளமையை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், அரச மற்றும் மாகாண அரச சேவைகளில் உள்ள ஊழியர்களுக்குநியாயமான அடிப்படைச்சம்பளஅதிகரிப்புஅல்லது விசேட கொடுப்பனவுத்தொகை வழங்கப்பட வேண்டும் என்று போராட்டத்தில்கலந்துகொண்டஅரச ஊழியர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்தக்கவனவீர்ப்புப்போராட்டம் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டபோதும்பிரதான ஆர்ப்பாட்டம்பத்தரமுல்லவில்உள்ள செத்சிறிபாய அரச திணைக்கள தொகுதிக்கு முன்பாக நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் பின்னர் அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க கூட்டின் இணைப்பாளர் சந்தன சூரிய ஆராய்ச்சி தெரிவித்ததாவது:

எடுக்கும் சம்பளத்தில் பிள்ளைகளுக்கு முழுமையான உணவை வழங்க முடியாதுள்ளது. குடும்பத்தை பராமரிக்க முடியாதுள்ளது. தாய், தந்தையர்களுக்கு மருத்துவச் செலவை வழங்கமுடியாதுள்ளது. வாழ்க்கைச் செலவுக்கு முகங்கொடுக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தான் நாம் அரச திணைக்களங்களுக்கு முன்பாகக் கூடி செய்தியொன்றை ரணில்-ராஜபக் ஷ ஆட்சிக்கு வழங்குகின்றோம். நவம்பர்13வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதில் அரச ஊழியர்களுக்கு ஆகக்குறைந்தது 20ஆயிரம்ரூபாசம்பளஅதிகரிப்பை அல்லது நிரந்தரமான மேலதிகக் கொடுப்பனவு வழங்குவது உறுதி செய்யப்படவேண்டும் என்றார்.

## ரணில் ஓர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் நாட்டுக்காக எமது கட்சியே அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. 2019 ஆம் ஆண்டு பெரும் எதிர்பார்ப்புடன் மக்கள் கோட்டபய ராஜபக் ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்து 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் ஊடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

2019ஆம் ஆண்டு இறுதி பகுதியில் பூகோள மட்டத்தில் தாக்கம் செலுத்திய கொவிட் பெருந்தொற்று தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக் ஷ அவதானம் செலுத்தினார்.பொருளாதாரத்தை காட்டிலும் மக்களின் சுகாதாரம் குறித்து அவர் கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

நாட்டில் கொரோனா பெருந்தொற்று தாக்கம் செலுத்தியதை ஒரு தரப்பினர் தற்போது மறந்து விட்டார்கள். பொருளாதார நெருக்கடியை எமது அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள் அரசியல் நெருக்கடியாகமாற்றியமைத்தார்கள். அப்போதைய சூழலில் ஜனநாயகம் மற்றும்சட்டம்ஒழுங்குஎன்பவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருந்தது.

ஆட்சியைப்பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் ஏற்கவில்லை. அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்ரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்ரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளதால் அவரது கொள்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வர அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிற்பட்ட காலத்தில் ஆட்சியாளர்கள் எடுத்த தீர்மானங்களுக்கும் அவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியை தடுப்பதற்கு அவர் உரியநடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே தவறைச் சுட்டிக்காட்டும் தற்துணிவு எமக்குண்டு. நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாகவே ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்துள்ளோம்.

கூட்டணி ஆட்சியில் ஜனாதிபதி எவ்வாறுசெயற்படவேண்டும்என்று ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது நியாயமானதே. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையேகளமிறக்குவோம் என்றார்.

## காலநிலைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான விவசாயத் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி கோரியிருந்த நிலையில், அது தொடர்பில் ஆராய உலகவங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே முதன்முறையாக இலங்கைக்கு வருகை தந்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் திறப்பனை, மான்னக்குளம் கிராமத்தில் 'காலநிலைக்கு உகந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலை' என்ற பெயரில் விவசாயப் பயிற்சிப் பாடசாலையொன்றைஅமைப்பதற்கு காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின்கீழ்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலையானதுவிவசாயிகளுக்கு காலநிலைக்கு உகந்த விவசாய நடைமுறைகள் மற்றும் அதிநவீன விவசாய தொழில்நுட்பங்களில் நேரடி அனுபவத்தை வழங்கும்.

உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டேமற்றும்தெற்காசியாவுக்கான உலக வங்கியின் பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரைசர் ஆகியோரின் பங்களிப்புடன் காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயம்தொடர்பில்பயிற்சிப்பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உலக வங்கியின் உதவியுடன் விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட ராஜாங்கனைபுளிவாழைசெய்கைத் திட்டத்தையும் தூதுக்குழுவினர் பார்வையிட்டனர்.

இத்திட்டமானது அந்தந்தப் பகுதிகளிலுள்ள சிறு தோட்ட உரிமையாளர்கள்மற்றும்விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை குறிப்பிட்டளவு மேம்படுத்த உதவியதுடன் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே, பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளுக்குகாலநிலைமாற்றம் மற்றும் நவீன விவசாயத்தை மையமாகக் கொண்ட பயிற்சிக் கல்லூரியின்முக்கியத்துவத்தையும், அந்த அறிவை விவசாயிகளுக்கு வழங்குவதன் நன்மைகளையும் சுட்டிக்காட்டினார்.

சூரிய சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களுக்கான அணுகல், டீசல் மீதான அதிகப்படியான சார்பைக் குறைத்தல் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குதல்மற்றும்உயர்கல்வி உள்ளிட்ட கல்விக்கான பிரவேச வாய்ப்பைப் பிள்ளைகளுக்கு வழங்குதல், பன்முகப்படுத்தப்பட்ட நிலைபேறான பயிர் விளைச்சல், சிறந்தஊட்டச்சத்தைஉறுதிசெய்தல் இதன் முக்கிய நன்மைகள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத்திட்டத்திற்கு உலகவங்கி ஆதரவளிக்க முடிந்தமையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அனா பியர்டே, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களைக்குறைக்கஇதுபோன்ற திட்டங்களின்முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, எவ்வாறு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயம்மற்றும்பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் டகபுமி கடோனோ, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உலக வங்கியின் முகாமையாளர் சியோ காந்தா, சர்வதேச அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனத்தின் பிரதி உதவி நிர்வாகி அஞ்சலி கவுர் மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கிப் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட்-ஜெர்வோஸ், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமை நிறுவனம், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகாமை நிறுவனம் யுனைடெட் மற்றும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பயனாளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, பிரதேச செயலகங்கள் ஆகியன இணைந்து அஸ்வெசும வாரத்திற்குள் நிவாரணப் பயனாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, ஜூலை மாதத்திற்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் நிவார ணப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒகஸ்ட் மாதத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணி எதிர்வரும் புதன்கிழமை முதல் தொடங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அஸ்வெசும தொடர்பில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால்அஸ்வெசுமபயனாளிகளின் பிரச்சினைகளைத்தீர்க்கஅஸ்வெசும வாரமொன்றைநடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருக்கும், தீர்க்கப்படாத பிரச்சினைகள் இந்த வாரத்தில் தீர்க்க எதிர்பார்க்கப்படுகிறது.

இது அடுத்த ஆண்டுக்கான விண்ணப்பம் கோரலல்ல. இது குறித்து அனைத்துப் பிரதேச செயலகங்களையும் தெளிவுபடுத்த நலன்புரி நன்மைகள் செயலகம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்ட பின், அடுத்த ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.

இன்றும்நாளையும் 1,365,000 பயனாளிகளுக்கு 8.5 பில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் புதன்கிழமை முதல் பயனாளிகள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதன்பிறகு, செப்டம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு, அடுத்த மாத இறுதிக்குள் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவு 07 கட்டங்களாக வழங்கப்பட்டன. நிவாரணம்பெறும்பயனாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். அஸ்வெசும கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்துமாறுஜனாதிபதிரணில்விக்ரமசிங்க சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அஸ்வெசுமகொடுப்பனவுகளுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பில் பிரச்சினைகள் எதுவும் இல்லை. ஆனால் பணம் கொடுப்பதில் தொழில்நுட்ப சிக்கல்கள் எழுந்துள்ளன. அவற்றைத் தீர்த்து, பணம்செலுத்துவதை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம். வங்கிக் கணக்குகள் தொடர்பில் பிரச்சினைகள் இருந்தன. இந்த வாரத்திற்குள் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையில், வறிய மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு மிகப்பெரியது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, பணம் வழங்குவதைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஜூலைமுதல்டிசெம்பர் வரையிலான கொடுப்பனவுகள் டிசெம்பர் மாதத்திற்குள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. விண்ணப்பம் கோரும்போது பல்வேறு பிரிவுகள் குறித்தும் கவனம் செலுத்த எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரம் தொடர்பில் ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் எடுத்துள்ளதீர்மானங்கள்மக்களிடம் வரவேற்புப் பெற்றவையாக இல்லாவிட்டாலும், இதுவரை எட்டப்பட்டுள்ள பொருளாதார உறுதிப்பாட்டுக்கு அது பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. அரசு ஊழியர்கள் மட்டுமின்றி ஏனைய மக்களும் இதன் பலனைப் பெறுகின்றனர். அரசாங்கம் என்ற வகையில், நாட்டை வலுவான பொருளாதாரத்திற்கு இட்டுச்செல்லும் சூழலை உருவாக்கி வருகிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் விரிசல் ஏற்படுத்துவதே சீனாவின் நோக்கம்

## சிறிதரன் எம்.பி. சாடல்



ஆசியாவில் சீனா தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இலங்கையில்; ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டு இருப்பதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சீன ஆய்வுக் கப்பலான சியான் ஜான் 6 இன்வருகையைமுன்னிட்டுயாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்; கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய தமிழர்களை எதிரியாகவும் சிங்களவர்களை நண்பனாகவும் கொண்டு செயற்படுவது போல இலங்கை தமிழர்களையும் இந்தியாவையும் எதிரியாகவும் சீனாவை நண்பனாகவும் கொண்டு செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில், இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே சீனா செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சீனாவின் செயற்பாடுகளை இந்தியா தெளிவாகப் புரிந்துகொள்ளாவிடின் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிடும் என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார். (05)

# விலையை கட்டுப்படுத்த முடியாமல் போனால் அரிசியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கும்

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறுகிறார்



நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் விலையைகட்டுப்படுத்தமுடியாது போனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சந்தையில் அரிசியின் விலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. நெல் விலை உயர்வால் அரிசியின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்து வரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

விலைக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்போது அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டால் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் விற்பனை செய்கின்றனர். இதை நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

எதிர்காலத்தில் மாவட்டந்தோறும் சென்று நிச்சயமாக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வோம். தொடர்ந்தும் விலையை கட்டுப்படுத்த முடியாது போனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும். - என்றார். (05)

# பயணப் படகு பிரச்சினைகள் குறித்து டக்ளஸ் கலந்தாய்வு



யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஞாயிற்றுகிழமை விஜயம் செய்துள்ளார்.

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு பயணத்தை மேற்கொள்ளும் படகுகளுக்கு இறங்கு துறையில் இடங்கள் ஒதுக்கப்படாததால், படகுகளை கரை சேர்ப்பதற்கும் தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதிலும் இடர்களை எதிர்கொண்டு வருவதாக படகு உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இதன்போது விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் விஜயம் செய்திருந்தார்.

நெடுந்தீவு மற்றும் நயினாதீவிற்கு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள், கடற்படையினர் மற்றும் துறை சார் அதிகாரிகளை குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு நேரில் அழைத்து எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இந்த விஜயத்தின் போது பேசப்பட்டது.

படகுகளுக்கு இறங்குதுறையில் இடம் ஒதுக்குதல் , தரித்து நிற்கும் நேரம் , சேவையில் ஈடுபடுவதற்கான நேர அட்டவணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் தீர்மானங்களும் மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



# யாழில் ஓட்டோ கவிழ்ந்து விபத்து குழந்தை உட்பட 4 பேர் காயம்

வேகமாக சென்றுகொண்டிருந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி,கடலை அண்மித்த பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ யாழ்ப்பாணம், பண்ணை பகுதியில் வைத்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோவில் சாரதி உட்பட 5 பேர் பயணித்த நிலையில், அவர்களில் 4 பேர் விபத்தில் காயமடைந்தனர் எனவும், அவ்வாறு காயமடைந்தவர்களில் 3 பெண்கள், ஒரு குழந்தை அடங்குவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸார் இந்தவிபத்துச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வவுனியா நகரில் நடந்த விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தை படுகாயம்

வவுனியா மன்னார் வீதி பிரதேச செயலகத்திற்கு முற்பகுதியில் உள்ள பாதசாரி கடவையில் ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஞாயிற்றுக்கிழமை இரவு 10.15 மணியளவில் வவுனியா மன்னார் வீதி வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்னாள் உள்ள பாதைசாரி கடவை பகுதியிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மின்சார சபையில் பணி புரியும் ஊழியர் ஒருவர் குருமன்காடு கலைமகள் மைதானத்திற்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து தனது பணி நிமித்தம் முல்லைத்தீவு செல்வதற்காக பஸ்நிலையம் நோக்கி நடந்து செல்கையில் அதே திசையில் பயணித்த வான் ஒன்று வேகக்கட்டுப்பட்டை இழந்து நடந்து சென்றவருடன் மோதியதில் குறித்த நபர் படுகாயமடைந்து வவுனியா பொதுவைத்தியசலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் .

குறித்த வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரனைகளை வவுனியா பொலிஸ்நிலைய போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா மன்னார் வீதி கலைமகள் மைதானத்திற்கருகில் தற்காலிகமாக வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய குடும்பஸ்தரே விபத்தில் படுகாயமடைந்த நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# மருதானை பாலமருகே ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, மருதானை ஸ்ரீசங்கராஜ பகுதியில் பாலம் ஒன்றிற்கு அருகிலிருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மருதானை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த பாலத்துக்கு அருகில் நபர் ஒருவர் வீழ்ந்து கிடப்பதாக மருதானை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலத்தை பொலிஸார் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் யாரென உறுதிப்படுத்தப்படவில்லையென தெரிவித்த பொலிஸார், உயிரிழந்தவர் 30 வயதுடையவரெனவும் 5 அடி 8 அங்குல உயரமுடைய மெல்லிய உடல்வாகுடையவர்எனவும்தாடியுடன் காணப்படும்நபர் ஊதா நிற காற்சட்டை மற்றும் நீல நிற டி சேர்ட் அணிந்தவர் எனவும் தெரிவித்தனர்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட களைகொல்லி மருந்துகளோடு இரு மீனவர்கள் கைது

## கோடி ரூபா பெறுமதியானவையாம்

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட, தடைசெய்யப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை கடற்படையினர் கைப்பற்றியதோடு, கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 2 மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை கல்பிட்டி விஜய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற் கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக மீன்பிடிக் கப்பலொன்றின் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், இந்த தடைசெய்யப்பட்ட களைக்கொல்லிகளும் பூச்சிக்கொல்லிகளும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுபவை எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 22 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திடீர் கரிசனை ஏன்?

கடந்த சில தினங்களாக எல்லை தாண்டி மீன்பிடிக்கும்இந்தியமீனவர்கள்கைதுசெய்யப்படுவது அதிகரித்திருக்கின்றது. இனி நாளாந்தம் இத்தகைய கைதுகள் இடம்பெறும் என்பதற்கான அறிகுறிகளையும் காண முடிகின்றது. தொடர்ந்து கைதுகள் இடம்பெறலாம் என்பதால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் வடக்கு மாகாண அதிகாரிகளை இரவிலும் பணியில் இருக்கும்படியும் கைது செய்யப்படும் மீனவர்களை நள்ளிரவிலேயே கடற்படையினரிடம் இருந்து பொறுப்பேற்கும்படியும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மீனவர் பிரச்சினை நீண்ட காலமாகவே தொடர்கின்றது. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு மீனவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள், குரல் எழுப்பி வருகின்றார்கள். ஆனால் அப்போதெல்லாம் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை. மீனவர்கள் எவ்வளவு பெரிதாக எதிர்ப்புக்குரல் எழுப்பியபோதும் போராட்டம் நடத்தியபோதும் ஒரு கண்துடைப்பாகச் சில இந்தியப் படகுகளும் மீனவர்களும் கைது செய்யப்பட்டனரே தவிர தீவிரமான நடவடிக்கை எதுவும் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டதில்லை.

இப்போதுதிடீரெனநடவடிக்கைகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்களைக் கைது செய்வது அதிகரித்திருப்பது மட்டுமல்ல, கைப்பற்றப்படும் படகுகளில் அவற்றின் உரிமையாளர்கள் இல்லாதபோதும் அவர்களை முதலாவது குற்றவாளிகளாகக் கொண்டு வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. 2018 கடற்றொழில் திருத்தச் சட்டத்தின்படி இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்படிஎல்லாவகைகளிலும்இந்தியமீனவர்களின் எல்லை மீறிய வருகைக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதன் பின்னணி என்ன என்பது மர்மமாகவே இருக்கின்றது. இது இங்குள்ள மீனவர்களின் கோரிக்கையின் மீதான நடவடிக்கை என்பதை நம்ப முடியவில்லை. இலங்கையில் சீன ஆய்வுக் கப்பல் தரித்து நிற்பதன் காரணமாகவே இந்திய மீனவர்கள் மீதான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று இந்திய மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால், அது மட்டுமே ஒரு வெளிப்படையான காரணமாக இருக்கும் என்றும் தோன்றவில்லை.

கடற்றொழில் சட்டங்களைத் திருத்தி, வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை தற்போதைய ஆட்சி மேற்கொண்டு வரும் நிலையில், உள்ளூர் மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி இந்திய மீனவர்களுக்கு வடக்குக் கடலில் மீன்பிடிக்க கட்டணத்துடன் அனுமதி வழங்குவதற்கான அரசின் முயற்சிகளுக்கான முன்னேற்பாடு இது என்ற சந்தேகங்களும் இருக்கின்றன.

இத்தகைய ஒரு ஏற்பாடு செய்யப்படுவதாக அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் ஏற்கனவே அறிவித்திருந்தார். அது தவிர சீனா கடற்றொழிலில் முதலிட ஆர்வமாக இருக்கின்றது என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாதெரிவித்திருந்தார். இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கைக் கடற்பரப்பை வெளிநாட்டவர்களுக்கு விற்பதற்கான திட்டத்தின் முன்னோடியாகவே இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று நம்புவதற்கும் அதிகம் இடமுண்டு.

எது எப்படியிருப்பினும் ஆளும் தரப்புத்தான் இந்தத் தீவிர நடவடிக்கைகளின் பின்னணி நோக்கம் என்பவற்றைத் தெளிவுபடுத்தவேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## பயனளிக்கும் பனை மட்டை




மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

காரோட்டும் சாரதிக்குக் இருப்பிடமாகிக் கைகொடுக்கும் நார், இருந்து களைப்பாற நாற்காலியில், சாய்மானைக் கதிரையில் இடம் பெறும் நார்; சந்தைக்குக் கொண்டு செல்லும் கூடையாய், உல்லாச இருக்கைகளாய், மாறியிருக்கும் பனைநார்-குப்பைகளைத் தாங்கும் கூடைகளாயும் வந்து நிற்கிறது. அது மட்டுல்ல சைக்கிள் கூடையாகவும் வருகிறது.அழகிய கைப்பைகளாகவும் அமைந்து நிற்கிறது பனை நார். இப்படிப் பயன்பட்டு நிற்பதுதான் முதல் நிலையில் எடுக்கப்படுகின்ற அகணிநாராகும்.



அடுத்த நிலையில் இருப்பது தான் புறணிநார்.புறணிநாரும் பயனுடையதாகவே இருக்கிறது. பெட்டிகளின் விளிம்பு கட்டுவதற்கு இந்த நார் உதவி நிற்கிறது. சுளகு, பெட்டிகளுக்கு வாய்கட்ட இந்தநார் பயனாகி நிற்கிறது.கடகங்கள் , கூடைகள் பொத்தவும் புறணிநார் வந்து நிற்கிறது.

அகணிநார், புறணிநார் எடுத்தபின் வந்து அமைவதுதான் சோத்தி நார். இந்த நாரை தட்டி எடுத்து அத னைக் கொண்டு கயிறும் திரிக்கப்படுகிறது.இப்படி வரும் கயிற்றினால் மாடுகளைக் கட்டலாம். ஊஞ்சல் ஆடுவதற்கும் பயன்படுத்தலாம்.

பனை ஓலையுடன் இணையும் மட்டையையும் சேர்த்து வேலி அடைக்கப் பயன்படுகிறது. ஓலை இல்லாமலிருக்கும் பனை மட்டையினைப் பயனாக்கியும் வேலிஅடைக்கப்படுகிறது.இரண்டு வகையான வேலிகளையும் அடைக்கும் பொழுது - பனை நார் அங்கும் வந்து கைகொடுத்து நிற்கிறது.வீடு வேயும் பொழுதும், வரிச்சுகள் கட்டும் பொழுதும் பனை நார் கூடவே வந்து நிற்கிறது. இருக்கவும், இறுக்கமாய் பிணைக்கவும், அழகாய் பொருட்களாய் அமையவும், என்று பல நிலைகளில் பனை நார் பயனாகியே நிற்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய கருத்தெனலாம்.

பனை மட்டையானது வேலியாக அமைந்து பாதுகாப்பு அரணாகி நிற்கிறது. அதனுடன் இணைந்த ஓலையும் வேலியிலும், வீட்டின் கூரையில் வந்து பயனாகி நிற்கிறது. பனை ஓலையின் பயன்பாடு மிகவும் காத்திரமானது என்பதைப் பார்த்தோம்.அந்த ஓலையில் இருக்கும் ஈர்க்கும் - தன்னாலும் உதவிட முடியும் என்று காட்டுவதில் முன்வந்து நிற்கிறது என்பதையும் கவனிப்பது முக்கியமாகும்.பனை ஈர்க்கும் கைத்தொழிலில் நுழைகிறது.

பனை ஈர்க்கு என்பதை சாதாரணமாக எண்ணிவிடல் கூடாது. தமிழரது வாழ்வில் ஒன்றிப்பிணைந்த ஒரு பொருளை உருவாக்குவதில் முன்னிற்கிறது பனை ஈர்க்கு. அந்தப் பொருளை அறிய ஆவல் எழு கிறதா. அதுதான். திருகணை . இதனைத் திருகணி என்றும் சொல்லுவார்கள்,இந்தத் திருகணைகளின் இருப்பிடம் பெரும்பாலும் சமையல் அறைகளாகவே இருக்கும். சமைக்கும் பாத்திரங்கள் மண் ணினால் ஆக்கப்பட்டே இருந்தன. மண்ணினால் ஆக்கப் பட்ட பானையினையோ, சட்டியினையோ , அல்லது மண்ணிலாகிய தாச்சியையோ அடுப்பில் வைத்துச் சமையல் செய்யும் பொழுது அப்பாத்திரத் தின்அடிப்பகுதிகரியாகமாறிவிடும். அந்த நாட்களில் விறகுதான் அடுப்பெரிக்கப் பயன்பட்டது. விறகடுப்பில் கரிவருவது என்பது தவிர்க்க முடியாததாகும்.மண் தாச்சியின் பயன்பாடு மாறி அலுமினியம் தாச்சி வந்தாலும் அதன் அடிப்பாகம் கரியாவதும் தவிர்க்க முடியாததேயாகும், அடுப்பிலிருந்து இறக்கி நிலத்தில் வைத்தால் நிலம் கரியயாக வந்துவிடும். இதனை தடுப்பதற்கும், இறக்கியவுடன் இருக்கும் வெப்பத்தால் பாதிப்பு வராமல் இருப்பதற்கும் கைகொடுத்தது தான் திருகணை.



இந்தத் திருகணையின் பயன்பாடு என்பது இன்றும் கிராமப் புறங்களில் இருக்கிறது என்பதும் நோக்கத் தக்கதாகும்.மண்பாத்திரங்களை வைக்கும் பொழுது அதற்குப் பாதுகாப்பாக அமைகிறது திருகணை. பானைகளோ, சட்டிகளோ தட்டையாக இருப்பதில்லை. அவற்றின் அடிப்பாகம் வளைவானதாகாவேதான் அமைந்திருக்கும். அப்படியான வற்றை நிலத்திலே பக்குவமாய் வைப்பதற்கு திருகணைகளே உகந்ததாக அமைகிறது, திருகணைகளைத் தலையில்வைத்து அதன்மேல்சுமக்கும்பொருட்களைவைத்துச் சுமந்து செல்லும் பழக்கமும் இருந்திருக்கிறது. கோவில்களில் கற்பூரச் சட்டியினை எடுப்பவவர்களுக்குத் திருகணை கைகொடுக்கிறது. திருகணையில் மூன்று பனை நார்க் கயிற்றினை மூன்று பக்கங்களில் இணைத்தால் வருவது தான் உறி. உறி என்றதும் கண்ணன் நினைவு நிச்சயம் வந்தே தீரும். உறியில் இருந்த வெண்ணைப் பானையில் கைவிட்டு களவாய் வெண்ணையினைத் திருடி உண்ட சம்பவம் கதையாகவே சொல்லப்படுகிறது. உறியில் மண் பானையினை வைத்து அதில் வெண்ணையை, தயிரை வைப்பது என்பது அக்காலத்தில் வீட்டில் நடைமுறையில் இருந்திருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்திட வேண்டும்.மூன்று கயிறுகளால் இணைக்கப்படும் உறியில் பல பொருட்களை பாதுகாப்பாக அந்த நாட்களில் வைத்தார்கள் என்பதும் நோக்கத்தக்கது.

சமையல் அறையில் மட்டுமல்ல , கலைப் பயணத்திலும் பனை ஈர்க்கினால் ஆக்கப்பட்ட திருகணை பயனாகி இருந்திருக்கிறது என்பதும் முக்கிய செய்தி எனலாம். கிராமியக் கலைகளில் கரகாட்டம் என்பது மிகவும் முக்கியமானது. அந்தக் கரகாட்டத்தின் பொழுது தலையிலே மூன்று தொடக்கம் ஐந்து வரையான பானைகளைத்தலையில்வைத்து ஒருநடனம்ஆடுவார்கள்.இதனைக் கரகாட்டம் என்று அழைப்பர். அடுக்கிய பானைகளைத் தலையில் தாங்குவதற்குக் கைகொடுத்து நிற்கிறது பனை நார் திருகணை என்பதுதான் இங்கு முக்கியமாகும்.

பனை ஈர்க்கினால் கூடைகள் செய்யப்பட்டன. இந்தக் கூடைகள் பழங்களைப் பொதி செய்ய உதவி-யாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் வெங்காயச் செய்கை பிரபல்யமானது. விளையும் வெங்காயம் வேறு பகுதி களுக்கு அனுப்பி வைப்பதற்கு பனை ஈர்க்கினால் ஆகிய கூடைகள் பெருதும் உதவியே நின்றன எனலாம், நெடுந்தீவில் பனை ஈர்க்கீனாலாகிய

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.........



கூடைகள் செய்வது என்பது தொழிலாகவே இடம் பெற்றது என்பதும் கருத்திருத்த வேண்டிய விடயமாகும். காற்றுப்புகும் வகையில் பனை ஈர்க்குக் கூடைகள் அமைந்திருப்ப துதான் மிகவும் முக்கிய அம்சமெனலாம்.

ஏடாகியது. இருக்கையாகியது. படுக்கப் பாயாகியது.சுமக்கும் சும்மாடாகியது.கயிறாகியது. மெத்தை ஆகியது. கட்டிலுக்கு ஆதாரமும் ஆகியது. பட்டை ஆகியது. பெட்டி ஆகியது. குட்டானும் ஆகியது. செருப்பா கியது. திருகணையாகியது.கோவிலுக்குக் கொண்டு செல்லும் அரிச்சனைப் பெட்டியாகியும் நின்றது.இப்படி யெல்லாம் ஆகி உதவிக் கரங்கொடுத்த பனை என்னும் கற்பகதரு - பெரியவரும் சிறியவரும் ஆனந்தமாய் சுவைத்து மகிழ்ந்திட அருமையான ஒன்றையும் அளித்திருக்கிறது. அதுதான் நுங்கு . நுங்கு என்று சொன்னவுடனேயே அதன் சுவை உணர்வுடன் கலந்தே விடும். எந்தவொரு சுவையிலும் அடங்காத் தனிச் சுவையினைக் கொடுப்பதாக நுங்கு இருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது

தென்னை இளநீரைக் கொடுக்கிறது. அதுவும் சுவைதான். ஆனால் பனையின் நுங்கின் சுவை வேறாகும். பனையோடு போட்டிக்குத் தென்னையும். வந்துதான் நிற்கிறது. தென்னையும் முக்கிய மானதுதான். ஆனால் பனைக்கு முன்னால் தென்னையானது சற்று தயங்கித்தான் வரவேண்டி இருக்கிறது. அதற்குக் காரணம் , பனையின் அளவுக்குத் தென்னையால் ஈடு கொடுத்து விடும் நிலை இல்லை என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

தென்னையின் இளநீரை கத்தியால் வெட்டினால் அதனுள் வெறும் நீரே இருக்கும்.இது தாகத்தைத் தீர்க்கிறது. சுவையாயும் இருக்கிறது. உள்ளே இருக்கும் வழு வழுப்பான பகுதியையயும் எடுத்துச் சுவை க்கலாம். இளநீருடன் கலக்கியும் சுவைப்பதும் உண்டு. நுங்கு அப்படியாய் இருக்காது. நுங்கினைத் தாங்கி நிற்கும் பனங்குரும்பையின் மேற் பகுதியைக் கத்தியால் கவனமாகச் சீவி யெடுத்தால் மூன்று கண்கள் விழித்தபடி இருக்கும். அந்தக் கண்களை மூடியபடி ஒரு மேல்தோலும் கவசமாகப் பாதுகாப்பாகவே இருக்கும்.நுங்கினைத் தோண்டி வெளியே எடுத்தும் சுவைப்பார்கள். பனங்குரும்பையை விட்டு எடுக்காமலும் விரலினால் தோண்டியும் சுவைத்தும் மகிழுவார்கள்.அப்படிச் சுவைக்கும் பொழுது ஏற்படும் உணர்வினைச் சொல்லினால் சொல்லிவிட முடியாது. சொன்னாலும் விளங்காது. சுவைத்துத்தான் அனுபவிக்க வேண் டும்.அப்படி நுங்கினைச் சுவைப்பது தனி அனுபவமாகும். அப்படிச் சுவைத்தவர்களுக்கே அதன் அருமை தெரியும்.

**தளரா வளர் தெங்கு தான் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்**

தென்னைக்கு நீர் தேவை. தென்னையினை வளர்ப்பதற்கு அதன் அடியில் நீரினை ஊற்றுதல் மிகவும் முக்கியமாகும். தொடர்ந்து ஊற்றப்படும் நீரினை உள்வாங்கியே தென்னையானது நன்றிக் கடனாய் நிறை வில் இளநீராய் தருகிறது என்பதைத் தமிழ் மூதாட்டி சொல்லுவது நோக்கத்தக்கது.ஆனால் எவரின் கவனி ப்புமே இல்லாமல் வளருகின்ற பனையானது எந்தவித எதிர்பார்ப்புமின்றி - சுவையான நுங்கினைத் தருவது என்பது பனையின் பெருங்குணத்தையே பறைசாற்றி நிற்கிற தென்றுதான் எடுக்க வேண்டும் அல்லவா !

பெண் என்னும் சொல்லே பெருமை உடைய சொல்லாகும். பெண் என்றாலே சக்தி என்றும் இயக்கும் வல்லமை உடையது என்றும் எண்ணும் வழக்கம் இருக்கிறது. மனித வாழ்வில் பெண்ணுக்கு பெரும் முக்கியத்துவம் இருப்பதை யாவரும் அறிவோம். யாவருமே ஏற்றும் கொள்ளுவோம். பனை பற்றிச்



சொல்ல வந்துவிட்டு , வாழ்க்கை, பெண் என்றெல்லாம் பொருத்தமே இல்லாமல் சொல்லுவதாய் எண்ணி விடாதீர்கள். வாழ்வினில் பெண்ணின் நிலை வித்தியாசமானது. அந்தப் பெண்ணுக்குத்தான் கருப்பையும், கருவினைத் தாங்கும் வல்லமையையும் இயற்கை வழங்கி இருக்கிறது. கருவாகி,உருவாகி, நிறைவில் குழந்தையாய் மலர்வதற்கு பெண்தான் முக்கியம்.இதனை ஆணால் செய்யவே முடியாது என்று இயற் கையே தீர்மானைத்து விட்டது. கற்பகதருவாம் பனையிலும் ஆணும் இருக்கிறது. பெண்ணும் இருக்கிறது. பெண் பனைதான் சுவையான நுங்கினை எமக்களிக்கும் பெருமையினைப் பெற்றிருக்கிறது என்பதுதான் இங்கு முக்கிய கருத்தாகும். பெண்பனையின் பாளையில்த்தான் குரும்பைகள் வருகின்றன.அப்படி வருகின்ற குரும்பைகள்தான் எமக்கெல்லாம் அருமையான சுவையினை அளிக்கும் நுங்காக வருகிறது.தென்னையின் காய்கள் இள மையாய் இருக்கும் பொழுது இளநீராகிறது. அதே காய்கள் முற்றினால் அதனை தேங்காய் என்றுதான் அழைக்கிறோம். எப்படித்தான் முற்றினாலும் தென்னம்பழம் என்று அழைப்பதே இல்லை. ஆனால் பனை யின் நிலை அப்படி அல்ல. பனையின் பாளையில் தோன்றும் குரும்பைகள் முற்றும் பொழுது நுங்கென அழைக்கிறோம். அந்த நுங்கு முற்றிய பின்னர் பனங்காய் என்று அழைக்கிறோம். அந்தப் பனங்காய்கள் நிறைவில் பனம்பழம் என்றுதான் அழைக்கின்றோம்.. இதுதான் பனையின் விசேடம் எனலாம். இந்த நிலையினை எப்பொழுதும் தென்னையினால் அடையவே முடியாது. இதனால் பனையுடன் தென்னை போட்டி போடுவ தென்பது சற்றுக் கடினமாகவே தெரிகிறதல்லவா !

பாளையிலிருந்து வருகின்ற குரும்பைகள் முற்றினால் வருகின்ற நுங்கானது இரண்டு நிலையில் அமை கிறது. இளம் நுங்கு என்றும் கல் நுங்கு என்றும் இந்த நிலை இரண்டாக இருக்கிறது என்பது முக்கியமா கும்.நுங்கானது இளமையாய் இருக்கும் பொழுது அதனைச் சீவிச் சுவைக்கலாம். இளமையான பருவத் தைக் கடந்து வரும் பொழுது நுங்கின் மென்மைத் தன்மை அகன்று அங்கு கடினமான தன்மை ஏற்பட்டு விடுகிறது. இப்படிக் கடினமாய் அமையும் பொழுதுதான் அந்த நுங்கு கல் நுங்கு என்று அழைக்கப்படுகிறது. இளநீரின் உட்பகுதியில் வழு வழுப்பாய் இருக்கும் பகுதியும் முற்றும் பொழுது வழு வழுப் பான நிலையினை விட்டு இறுக்கமாய் ஆகிவிடுவதைக் காண்கிறோம் அல்லவா? அதுபோலத்தான் கல்நுங்கும் காணப்படுகிறது.

சுவையினை அளிக்கும் நுங்குதானே என்றுமட்டும் எடுத்து விடக் கூடாது. நுங்கின் பயன் பாடுகளைப் பார்த்தால் வியந்தே போய் விடுவோம். அந்தளவுக்கு நுங்கானது சிறப்பானதாகவே விளங்குகிறது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமெனலாம்

( வளரும் )


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்


பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,


ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# அரச நிறுவனங்களுக்கு இடையில் மோதல்: அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமாகின்றன

## பிரசன்ன ரணதுங்க வேதனை



சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையிலான இழுபறியை உடனடியாக நிறுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இரு தரப்பு அதிகாரிகளிடமும் சனிக்கிழமை பணிப்புரை விடுத்தார். இவ்விடயம் தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வர வேண்டுமென அமைச்சர் அங்கு வலியுறுத்தினார்.

அப்போது இரு நிறுவனங்களும் தங்கள் மீது நம்பிக்கை வைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை கொழும்பு மாநகர சபைக்கே இருந்தது. ஆனால் வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு காணிகளும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2019 இல் தமது நிறுவனத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. அது நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 50 இன் படியாகும்.

இதற்கு எதிராக கொழும்பு மாநகர சபை சட்ட நடவடிக்கை எடுத்திருந்தது.

அங்கு, இரண்டு நிறுவனங்களும் அரசு நிறுவனங்கள் என்பதால், சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என, நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. குறித்த வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்குமாறும் சீன அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது.

குறித்த பிரச்சினையை பேச்சு மூலம் தீர்த்து வைப்பதற்காக சனிக்கிழமை பத்தரமுல்லை, செத்சிரிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக்கவின் பங்களிப்புடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அரச நிறுவனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் காரணமாக அபிவிருத்தி திட்டங்கள் மிகவும் தாமதமாகி வருகின்றன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு குறிப்பிட்டார். இவ்வாறான கருத்து முரண்பாடுகளால் சில சமயங்களில் அபிவிருத்தி திட்டங்கள் நாட்டுக்கு இழக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அப்போது அரசியல் அதிகாரத்தின் மீதும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அநீதியாகும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்காக செயல்படுகின்றன. எனவே, சட்டங்கள், கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சிக்கிக் கொள்ளாமல் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரச நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் 1996 வீடுகள் கட்டப்படும். அதற்காக சீன மக்கள் குடியரசு 552 மில்லியன் யுவான் நிதி உதவி வழங்க உள்ளது. கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான மஸ்மடுவ மற்றும் எழுமடுவ காணிகளில் சுமார் 500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. காணியின் உரிமை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் கொழும்பு மாநகர சபைக்கும் இடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் கைவினை கலைஞர்களுக்கு 1996 வீடுகளில் 108 வீடுகள் ஒதுக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொட்டாவ பழத்துருவத்த பகுதியில் வீடு நிர்மாணிக் கப்பட உள்ளது.

நிர்மாணிக்கப்படும் 1996 வீடுகளில் இந்நாட்டின் கலைஞர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொட்டாவ பழத்துருவத்த பகுதியில் வீடு நிர்மாணிக் கப்பட உள்ளது. பேலியகொட, தெமட்டகொட, மஹரகம மற்றும் மொரட்டுவ ஆகிய இடங்களில் ஏனைய வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளன என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இங்கு இந்தத் திட்டத்திற்காக செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, ரெண்டர் வேலைக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெறவிருக்கும் மாநாட்டின் போது வீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு கூறியது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ரூ. 30 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிலை களவாடப்பட்டது தொடர்பில் ஒக்டோபர் 27 வவுனியா பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் நேற்று இந்தச் சிலை மீட்கப்பட்டது என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

சிலையைக் கடத்தி யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யும் நோக்கில் எடுத்து வந்தவர் தப்பியோடி தலைமறைவாகி விட்டார் என்று தெரிவித்த பொலிஸார், அவரைத் தேடி வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவு கண்காணிப்பாளர் ரி.மேனன் தலைமையிலான குழுவினரால் இந்தச் சிலை மீட்கப்பட்டது.

ஐம்பொன் சிலை ஒன்று யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் அதனை மீட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட சிலை யாழ்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியுட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பேச்சு நடத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்வோம். நாம் அவ்விதமான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு அஞ்சவில்லை. ஆனால், வெறுமனே நெத்தலிகளின் கருத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. தற்போது நெத்தலிகள் தமது எதிர்கால அரசியல் நோகத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக கடுமையாக முயற்சி செய்கின்றன. ஆகவே, பதவிகளுக்காக வாய்ந்திறக்கும் நெத்தலிகள் பற்றி நாம் அதிகளவில் கரிசனை கொள்ளத்தேவையில்லை” என்றார்.

## சீரற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப் பட்டுள்ளன.

அந்த வகையில், இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து கொழும்பு நோக்கி வருகை தந்த யுஎல் 365 விமானம் மற்றும் மாலைதீவின் தலைநகர் மாலியிலிருந்து கொழும்பு நோக்கி வருகை தந்த யுஎல் 116 விமானம் ஆகிய விமானங்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது பெய்து வரும் மழை மற்றும் சீரற்ற மற்றும் தெளிவற்ற வானிலை காரணமாக பண்டாரநாயக்க கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையங்களில் குறித்த விமானங்களை தரையிறக்க முடியாத நிலையில், இவ்விமானங்கள், இந்தியாவின் கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டதாக ஸ்ரீ லங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

## ஆய்வைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் உள்ள மீன்கள், வறட்சிக் காலத்தில் மீன்களின் நிலைமைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயவுள்ளது.

அத்துடன், கடலின் வெவ்வேறு நீர் நிலைகள் சம்பந்தமாகவும் ஆய்வுகள் முன்னெடுக்கப்ப டவுள்ளன.

அதேவேளை, குறித்த ஆய்வுக் கப்பலில் நாராவின் நான்கு அதிகாரிகளும் கடற்படையின் இரண்டு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

## அடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டையானவிடயங்களின் விலைகளை அதிகரிக்கும் ஆட்சி எமக்குத் தேவையில்லை. அவ்வாறான ஆட்சி இருந்தும் பயனில்லை.

அரச உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும், திறைசேரிக்கும் கிடைக்கவேண்டிய நிதியினைப் பெற்றுக்கொள்வது தான் இதற்கான தீர்வாகவும் உள்ளது. அதனை நாம் வெளிப்படையாக கூறியுள்ளோம்.

கடந்த காலங்களில் இந்த இரண்டு திணைக்களங்களுக்கும் சேரவேண்டிய நிதியானது நட்பின் காரணமாகப் பெற்றுக் கொள்ளப்படவில்லை. அந்த தொகையானது சிறிய தொகையல்ல. 58 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும்.

ஆட்சியாளர்கள் உரிய வரிகளை பெற்று நாட்டை முன்நோக்கி நகர்த்தவில்லை. சுங்கத் திணைக்களத்திற்குத் தேவையான தொகைகள் கிடைக்கவில்லை. சதாரணமாக மதுபானப் போத்தல்களில் ஒட்டப்படும் லேபிள்களில் செய்யப்படும் மோசடியால் நாளொன்றுக்கு 50 முதல் 60 ஆயிரம் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவற்றை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது மக்களின் கழுத்தைநெரித்து அதன் மூலம் வருமானத்தைப்பெறும் நடவடிக்கைகளையே இந்த ஆட்சி முன்னெடுகின்றது.

ஆயிரக்கணக்கான புத்திஜீவிகள் நாட்டை விட்டு செல்கின்றனர். ஆனாலும், ஆட்சியில் உள்ளவர்கள் தமது நண்பர்களுக்கு வரி விலக்கினை வழங்குகின்றார்கள் என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகச் சேவைகள் நிறுத்தப்பட்டதாக திணைக்கள அறிவிப்புத் தெரிவிக்கின்றது. கடற்கரை மார்க்க ரயில்கள் மற்றும் வடக்கு பிரதான பாதை ரயில்கள் ஆகியன சேவையில் ஈடுபடவில்லை.

பணி நிறுத்தம் தொடர் பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகும், பணியாளர்களின் கோரிக்கைகள் மற்றும் இதர விடயங்கள் சம்பந்தமாக ஆராய்யப்பவதாகவும் திணைகணக்களம் தெரிவித்துள்ளது.

## வடக்கில் அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் உட்பட வடக்கு மாகாணத்தில் உள்ள பல அரச நிறுவனங்களில் அண்மைக் காலமாக இவ்வாறான பலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சாரதி மற்றும் சிற்றூழியர் தரப் பணிகளுக்கு அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்திலேயே பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் நிலையில் வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள், குறிப்பாகத் தெற்கைச் சேர்ந்த சிங்களவர்கள் நியமனம் செய்யப்படுவது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) காலை பிரதமரோடு கலந்துரையாடி இருந்தேன். வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் தமிழ் பேசுகின்ற மக்கள். அரச தொழில் வாய்ப்புகளில் அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

கடந்த காலத்தில் இதில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அது உடனடியாக களையப்பட வேண்டும் என்றும் சொல்லி இருந்தேன் இதற்கு முன்னர் அமைச்சரவையிலும் இந்தப் பிரச்சினை தொடர்பில் அவரோடு கலந்துரையாடி இருக்கின்றேன்.

ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் தென்னிலங்கையில் இருந்து வடக்குக்க நியமனங்கள் வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்துமாறும், இங்கிருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் நான் சொல்லியபோது அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அடுத்தடுத்த கிழமைகளில் இது தொடர்பான அவரது நடவடிக்கைகள் நடைமுறைக்கு வரும்.

ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டவர்களும் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்களுக்கு இங்கு மொழிப்பிரச்சனை, தங்குமிட பிரச்சினைகளும் இருக்கின்றன. அவர்கள் உழைப்பது அவர்களது செலவுக்கே போய்விடும்.

இது அறியாமையால் செய்யப்பட்ட விடயமா அல்லது உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட விடயமா என்பது வேறு. என்னை பொறுத்தவரையில் நான் இதற்கு இடம் கொடுக்க மாட்டேன் - என்றார்

தொல்லியல் திணைக்களங்களுக்கு இவ்வாறு நீண்ட நாள்களின் முன்பாக நியமனம் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோது அவர்களும் திருப்பி அனுப்பபடுவார்கள் - என்றார் அமைச்சர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com







காலைக்கதிர் Kalaikkathir

# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை அபகரிக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முயற்சி

## உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மாங் கொல்லை பகுதியில் அண்மையில் இராணு- வக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகள் என அதிகாரிகள் உரிமை கோரியமை யால் காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங் கொல்லை பகுதியில் இருந்து இராணுவத்தி னர் வெளியேறியதையடுத்து, அப்பகுதி மக் கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி, எல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த வியா ழக்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் என தம்மை அடையா ளப்படுத்திக்கொண்ட சிலர் குறித்த பகு திக்கு வந்து, 'இந்தக் காணிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குரியவை; நாம் கடந்த 40 வருட காலத்துக்கு முன்பே காணி உரிமையாளர்களிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்துவிட்டோம்' எனத் தெரிவித்தனர்.

'காணியைநாம் யாருக்கும் விற்கவில்லை. இது எங்களின் காணிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமானவை எமது காணிகளில் இருந்து சற்று தொலைவில் உள்ள காணிகளே' என காணி உரிமையாளர்கள் பதிலுக்குத் தெரிவித்தனர். அதனை ஏற்க மறுத்த அதிகாரிகள், 'இந்த காணிகளையும் எமது நிறுவனம் கொள்வனவு செய்துவிட்டது. இது உங்கள் காணிதான் என்பதற்கான உறுதியை எங்களுக்கு காண்பித்து உறுதிப்படுத்துங்கள்' எனக் கூறினர். அதற்கு காணி உரிமையாளர்கள் 'நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதி காட்ட வேண்டும்?' என கேட்க, 'உங்களின் உறுதிகளை பரிசீலித்து உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு' என்று தெரிவித்தனர்.

அதனையடுத்து, 'இந்தக் காணிகளையும் கொள்வனவு செய்துவிட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளன. ஆதா ரங்களுடன் வருகிறோம்' எனகூறி அங்கிருந்து சென்றுள்ளனர். (05)

# போதைக்கு அடிமையாகி சொந்த வீட்டையே எரித்த இளைஞன் காத்தான்குடியில் கைது



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை அதி காலையில் இளைஞர் ஒருவர் சொந்த வீட்டை தானே தீ வைத்து எரித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக 27 வயது இளைஞர் பொலி- ஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் உத்தரவிட்டார்.

தீ வைக்கப்பட்ட வீடு முற்றாக எரிந்து நாசம ாகியுள்ளதுடன், வீட்டிலிருந்த பொருள்கள் அனைத் தும் எரிந்து சாம்பராகியுள்ளன எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதி காரி ஏ.எஸ்.எம்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

போதைவஸ்து பாவனையின் எதிரொலியே இச்சம்பவம் இடம்பெறக் காரணம் எனத் தெரி விக்கப்படுகிறது.

அத்தோடு, கைதானவர் ஐஸ் மற்றும் போதை வஸ்துக்கு அடிமையானவர் என இளைஞரின் தந்தை தெரிவித்துள்ளார்.

இது குறித்து காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹப்புத்தளையில் மண்சரிவு: 5 குடும்பங்கள் வெளியேற்றம்

தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக ஹப்புத்தளை பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ள தாக ஹப்புத்தளை நிர்வாக கிராம அதி காரி ஜகத் லியனகே தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்தில் வசிக்கும் 5 குடும்பங்கள் தற்காலிகமாக வெளி யேற்றப்பட்டு, உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த அனர்த்தத்தால் ஓர் ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே பாதிக் கப்பட்டுள்ளதாகவும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த இடத்தை ஆய்வு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஜனக ரத்நாயக்காவிடம் கப்பம்பெற்ற மூவர் கைது

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவை மிரட்டி கப்பம ாக பணம் பெற்ற குற்றச்சாட்டில் 3 பேர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனக ரத்நாயக்கவிடமிருந்து 1.5 மில்லியன் ரூபாவை கப்பமாகப் பெற்ற குற்றச்சாட்டிலேயே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தன்னைப் படுகொலைசெய்வதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாகவும் உயிரைக் காப்பற்ற வேண்டுமெனில் 1.5 மில்லியன் ரூபாவை கப்பமாக தரவேண்டும் எனத் தெரிவித்து தனக்கு இனந்தெரியாத நபர் ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாக ஜனக ரத்நாயக்க கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)

# முன்னாள் ஜனாதிபதிகள் இராணுவ அதிகாரிகளுக்கு வெளிநாடுகளின் தடைகளால் பெரும் அவமானமாம்

## சரத்வீரசேகர ஜனாதிபதிக்குக் கடிதம்



அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள், முன்னாள் ஜனா திபதிகள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவ அதி காரிகளிற்கு விதிக்கவிதித்துள்ள பயணதடைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அவமானகரம ான நிலை குறித்து நாடாளும ன்ற உறுப்பினர் சரத்வீரசேகர ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

25 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதி கள் மஹிந்தராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு படைகளின் பிரதானி சவேந்திரசில்வா உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் எவருக்கும் எதிராக உள்நாட்டு வெளிநாட்டு நீதிமன் றங்களில் யுத்த குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை என சரத்வீரசேகர தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான அரசியல் இராணுவத் தலைமைத்து- வத்தை வழங்கியவர்களை அவமானப்படுத்துவதற்காக மேற் குலகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பிரேரணைகளை பயன்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் ஜெனீவா சாசனம் மற்றும் யுத்தம் குறித்து மனித உரிமை பேரவை தெளிவுபடுத்த தவறிவிட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில அதிகாரிகள் அமைதிப் படை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை, ஆதார மற்ற யுத்தகுற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களின் நியம னங்கள் தாமதிக்கப்பட்டன அல்லது நிராகரிக்கப்பட்டன எனவும் சரத்வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (05)

# 140 கிலோ கேரளா கஞ்சாவுடன் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணத்தில் 140 கிலோ கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடல் வழி- யாக, படகில் கஞ்சாவை கடத்தி வந்து அவற்றை ஓட்டோ ஒன்றில் எடுத்து சென்ற போது , வட்டுக்கோட்டை பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் , மீட்கப்பட்ட கஞ்சாவும், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது

நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வருக்கு அடுத்த வருடம் முதல் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

வருடாந்த வரவு -செலவுத் திட் டத்தின் ஒதுக்கீடுகளுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வயது வரம்பில் ஏற்பட்ட மாற்றம், சமூகப் பாதுகாப்பு வரி திருத்தங்கள் காரணமாக வரித்தொகையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அறவிடப்படும் மதிப்பில் ஏற்பட்ட மாற்றம் என்பன காரணமாகவே இவ்வாறு அதி கரிக்கப்படுவதாகவும் பிரதமர் சுட் டிக்காட்டியுள்ளார். (05)

# மயங்கி வீழ்ந்த மாணவி சிகிச்சை பயனின்றி சாவு

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் தலைவிறைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த நிலையில், சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட மாணவி சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

குருநகரைச் சேர்ந்த ஜேசுதாஸ் அனோஜினி (வயது-10) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவி கடந்த 21ஆம் திகதி தலைவிறைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் அவர் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்தார். மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (05)

# மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக தீப்பந்தம் ஏந்தி புலத் சிங்களவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

புலத்சிங்கள பகுதியில் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப் பகுதி மக்கள் தீ பந்தம் ஏந்தி போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

புலத்சிங்கள தேசிய மக்கள் படை யின் பிரதம அமைப்பாளர் பிரசன்ன அமரசேகரவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணத்தைக் குறைக்க முடியாவிட்டால் துறைசார்ந்த அமை ச்சர் பதவி விலக வேண்டும் எனவும், அமைச்சர்களின் மின் கட்ட ணத்தை ஏழை மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# பூஸா சிறையில் கைப்பற்றிய கைத்தொலைபேசிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்களிடம் ஒப்படைப்பு!

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது இரண்டு பிரிவுகளில் இரண்டு கைத் தொலைபேசிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைஅத்தியட்சகரின் பணிப்புரைக்கமைய பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவை கைப்பற்றப்பட்டன.

ஏ மற்றும் பி பிரிவுகளிலேயே இந்த கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த இரு பிரிவுகளிலும் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் இரண்டாம் தர குற்றவாளிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பாரிய குற்ற வாளிகளின் சகாக்கள் என சிறைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைப்பற்றப்பட்ட இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளன. (05)

# நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவதாக மிரட்டிய சிப்பாய் கைது

முகநூல் மூலமாக அறிமுகமான 16 வயது பாடசாலை மாணவியுடன் காதல் விவகாரத்தில் ஈடுபட்டு காதலி மற்றும் அவரது 13 வயது சகோதரியின் நிர்வாண புகைப்படங்களை வட்ஸப் மூலமாக தனது தொலைபேசியில் பதிவு செய்து அதனை இணையத் தளத்தில் வெளியிடுவதாக அச்சுறுத்தி 50 ஆயிரம் ரூபா பணத்தை தனது வங்கி கணக்கில் வைப்பு செய்ய கட்டாயப்படுத்திய குற்றச் சாட்டின் பேரில் இளம்இராணுவசிப்பாய்ஒருவர்சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் வடக்கில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும் குளியாபிட்டிய பிரதேசத்தை 21வயது இளம் இராணுவ சிப்பாய் ஆவார்.

இவர் 16 வயது சிறுமியுடன் முகநூல் மூலமாக காதல் விவகாரத்தில் ஈடுபட்டுள்ளதோடு இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் இதுவரை சந்தித்தது இல்லைஎனப்பொலிஸார்தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை 6 மாதங்களுக்குள் முற்றாக நிறுத்தத் திட்டமாம்

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை எதிர்வரும் 6 மாதங்களுக்குள் முற்றாக நிறுத்துவதற்கு பொலிஸார் திட்டமிட்டுள்ளனர் என மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பாதாள உலக செயற்பாடுகள் அனைத்தும்வெளிநாடுகளிலிருந்து வழிநடத்தப்படுகின்றமைதற்போது தெரிய வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், பொதுமக்களையும் வர்த்தகர்களையும் அச்சுறுத்தும் நபர்கள் தொடர்பில் தகவல் இருப்பின் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொதுமக்களிடம்வேண்டுகோளும் விடுத்துள்ளார். (05)



# அரசுக்கு எதிராக வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்



வவுனியா தபால் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அரசாங்கத்திற்கு எதிராக கனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதான தபால் நிலையம் முன்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (திங்கட்கிழமை) மதியம் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரியும், அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் நாடு பூராகவும் இடம்பெறும் தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து குறித்த போராட்டம் இடம் பெற்றது. (05)

# மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு

## யாழ், ஆனைக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை பகுதியில் மின்குமிழைப் பொருத்தும் போது மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

24 வயதுடைய உ.உசாந்தன் என்பவரே உயிரிழந்தவராவார்.

தனது வீட்டில் வைத்து, சுண்டல் வண்டிக்குரிய மின்குமிழைப் பொருத்தும் போதே அவர் மின்தாக்குதலுக்கு உட்பட்டார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (05)

# தமிழர்கள் விழிப்படைய வேண்டும் இல்லாவிட்டால் அழிந்துவிடுவோம்

## சுகாஷ் எச்சரிக்கை

கடலட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் சுகாஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

மறுபுறம் சீனா போன்ற நாடுகளிலிருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறும் நிலையில் அது குறித்து விழிப்படைய வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அழிந்துவிடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)



# மத வழிபாடுகளை மேற்கொள்ள இடையூறு ஏற்படுத்தக் கூடாது

## டக்ளஸ் வலியுறுத்து

ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

மறவன்புலவு மேற்கு சிதம்பர சித்தி விநாயகர் ஆலயம், பரிபாலன சபையினரால் பூட்டப்பட்டுள்ளமை தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்கு பிரதேச மக்களால் கொண்டு வரப்பட்டிருந்தது.

குறித்த விவகாரத்தை சுமுகமாக தீர்க்கும் நோக்கிலான கலந்துரையாடல் நேற்று(திங்கட்கிழமை) யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், ஒரு வார காலத்தினுள் ஆலய பரிபாலன சபையினருடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்தார்.

மேலும் பிரதேச மக்கள் விரும்பிய நேரத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்தார். (05)

# தட்டுப்பாடற்ற மணல் விநியோகத்தை உடன் உறுதிப்படுத்துதல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

வட மாகாணத்தின் கட்டுமானப்பணிகளுக்கு தேவையான மணல்நியாயமானவிலையிலும் தட்டுப்பாடின்றியும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்' என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மணல்அகழ்வுமற்றும்மணல் விநியோகம் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்இதனைத்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சட்டவிரோதமணல்அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அத்துடன் மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டு தட்டுப்பாடின்றி மணல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அடையாளப்படுத்தப்பட்ட மணல் திட்டுக்களில் மணல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை அனைத்து திணைக்களங்களும் வழங்க வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)



# இலங்கை மின்சார சபை ஊழியர் பாதசாரிக் கடவையில் உயிரிழப்பு

வவுனியாவில், பிரதேசசெயலகத்திற்கு முன்பாகவுள்ள பாதசாரி கடவையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மின்சார சபை ஊழியரொருவர் உயிரிழந்துள்ளார்.

பாதசாரி கடவையில் சென்றுகொண்டிருந்த நபர் மீது வானொன்று மோதியமையே இந்த விபத்துக்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விபத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர் மூன்றுபிள்ளைகளின்தந்தையான 48 வயதுடைய நௌபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் குறித்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் , இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என வும் வவுனியா பொலிஸார் தெரி வித்துள்ளனர். (05)

# வரவு செலவுத் திட்டத்தில் நிச்சயம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## அமைச்சரவையில் ஜனாதிபதி தெரிவிப்பு

அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக் கப்படவுள்ள வரவுசெலவுத்திட்டத்தில்அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியாகி இருக்கின்றது.

''தனியார் துறை ஊழியர்களுக்கும் அடுத்த ஆண்டு முதல் சம்பள உயர்வுக்கான கோரிக்கையைத் தான் முன்வைப்பார் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்,'' என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பள உயர்வு கேட்டு நேற்று நண்பகல்அரசஅலுவலகங்களுக்கு முன்பாக அரச பணியாளர்கள் போராட்டம்நடத்தியபின்னணியில் ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகி இருக்கின்றது.

அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவதே அரசின் கொள்கையாக இருக்கும் என அவர் அமைச்சர்களிடம் தெரிவித்திருந்தார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி நவம்பர் 13 நாடாளுமன்றில் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2023இல் வெளியிடப்பெற்றது.